# ஜனவரி – 19 – சனி

## புனித கனியூட்

**“கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது, ஆற்றல் வாய்ந்தது: இருபக்கமும் வெட்டக்கூடிய எந்த வாளினும் கூர்மையானது:” எபி. 4:12**

## முதல் வாசகம் : எபிரேயர் 4 : 12 - 16

சகோதரர் சகோதரிகளே! கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது, ஆற்றல் வாய்ந்தது. இருபக்கமும் வெட்டக்கூடிய எந்த வாளினும் கூர்மையானது. ஆன்மாவையும் ஆவியையும் பிரிக்கும் அளவுக்குக் குத்தி ஊடுருவுகிறது. எலும்பு மூட்டையும் மச்சையையும் அவ்வாறே ஊடுருவுகிறது உள்ளத்தின் சிந்தனைகளையும் நோக்கங்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறது. படைப்பு எதுவும் கடவுளுடைய பார்வைக்கு மறைவாய் இல்லை. அவருடைய கண்களுக்கு முன் அனைத்தும் மறைவின்றி வெளிப்படையாய் இருக்கின்றன. நாம் அவருக்கே கணக்குக் கொடுக்கவேண்டும். எனவே, வானங்களைக் கடந்துசென்ற இறைமகனாகிய இயேசுவை நாம் தனிப்பெரும் தலைமைக் குருவாகக் கொண்டுள்ளதால் நாம் அறிக்கையிடுவதை விடாது பற்றிக்கொள்வோமாக! ஏனெனில், நம் தலைமைக் குரு நம்முடைய வலுவின்மையைக் கண்டு இரக்கம் காட்ட இயலாதவர் அல்ல. மாறாக, எல்லா வகையிலும் நம்மைப்போலச் சோதிக்கப்பட்டவர் எனினும் பாவம் செய்யாதவர். எனவே, நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற வேளையில் உதவக் கூடிய அருளைக் கண்டடையவும், அருள் நிறைந்த இறை அரியணையைத் துணிவுடன் அணுகிச் செல்வோமாக.

**பதில்பாடல் :** ஆண்டவரே! உம் வார்த்தைகள் வாழ்வு தரும்
வார்த்தையைக் கொடுக்கின்றன.

## நற்செய்தி : மாற்கு 2 : 1 3 -17

அக்காலத்தில் இயேசு மீண்டும் கடலோரம் சென்றார். மக்கள் கூட்டத்தினர் எல்லாரும் அவரிடம் வரவே, அவர் அவர்களுக்குக் கற்பித்தார். பின்பு அங்கிருந்து அவர் சென்றபோது அல்பேயுவின் மகன் லேவி சுங்கச்சாவடியில் அமர்ந்திருந்ததைக் கண்டார் அவரிடம், ”என்னைப் பின்பற்றி வா” என்றார். அவரும் எழுந்து இயேசுவைப் பின்பற்றிச் சென்றார். பின்பு அவருடைய வீட்டில் பந்தி அமர்ந்திருந்தபோது வரிதண்டுபவர்கள், பாவிகள் ஆகிய பலர் இயேசுவோடும் அவருடைய சீடரோடும் விருந்துண்டனர். ஏனெனில் இவர்களுள் பலர் இயேசுவைப் பின்பற்றியவர்கள். அவர் பாவிகளோடும் வரிதண்டுபவர்களோடும் உண்பதைப் பரிசேயரைச் சார்ந்த மறைநூல் அறிஞர் கண்டு, அவருடைய சீடரிடம், ”இவர் வரிதண்டுபவர்களோடும் பாவிகளோடும் சேர்ந்து உண்பதேன்?” என்று கேட்டனர். இயேசு, இதைக் கேட்டவுடன் அவர்களை நோக்கி, ”நோயற்றவர்க்கு அல்ல, நோயுற்றவருக்கே மருத்துவர் தேவை. நேர்மையாளர்களை அல்ல, பாவிகளையே அழைக்க வந்தேன்” என்றார்.

**தியானம்:** ஆதியிலிருந்தே கடவுளின் வார்த்தைகளையும், அவருடைய வழிநடத்தலையும் தவறாகப் புரிந்துகொண்ட மக்கள் பலரும் இருந்தே வந்திருக்கின்றனர். அதுவும், இயேசுவின் காலத்தில் கடவுளின் வார்த்தைகளும், அவரால் கொடுக்கப்பட்ட சட்டதிட்டங்களும் குருக்கள், சட்ட வல்லுனர்கள், பரிசேயர் போன்றவர்களால் மாற்றப்பட்டும், தமக்கு இசைவான வகையில் அவற்றைப் பொருள்படுத்தி, தாம் வாழவும், தாழ்ந்தவர்களை அடிமைப்படுத்தி தமக்குக் கீழ்ப்படிந்து நடக்கவும் பயன்படுத்தப்பட்டு வந்தன. இவையனைத்தையும் கண்ணுற்ற இறைமகன் எந்தவிதத் தயக்கமோ, கலக்கமோ, பயமோ இன்றி அவற்றை எதிர்க்கவும், கடவுளின் வார்த்தையில் வெளிப்படும் உண்மைச் செய்தியை சாதாரண பாமர மக்களுக்கு விளக்கவும் தம்மை அர்ப்பணித்தார். இதுவே, அவரது நற்செய்திப் பணியாக அமைந்தது. அந்த நற்செய்திப் பணிக்காக தமது உயிரையே பணயம் வைக்கத் துணிந்தார். அதற்காகவே தாம் இவ்வுலகுக்கு அனுப்பப்பட்டார் என்பதை உணர்ந்து அப்பணியைச் செவ்வனே செய்து முடித்தார். இதனால், இறைமகன் இயேசுவின் உயிர்க்கையளிப்பு கடவுளுக்கு உகந்த பலியாகவும், உலக மாந்தர் அனைவரின் பாவங்களுக்குப் பரிகாரமாகவும் அமைந்தது. நம் தலைமைக் குருவாம் இறைமகன் இயேசு போன்று நாமும் கடவுளின் வார்த்தைகளில் மிளிரும் உண்மைகளை மட்டும் அறிந்து, அதை நமது வாழ்வாக்கி, அதை மற்றவர்களுக்கும் அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கும், பணம், பொருள், தற்பெருமை போன்ற காரணங்களுக்காகவும் கடவுளின் வார்த்தைகளை அவற்றில் வெளிப்பட வேண்டிய உண்மைகளை மறைப்பதும், மாற்றி அமைப்பதும் தவறு என்பதை இன்றைய இறைவார்த்தைகள் நமக்குக் கோடிட்டுக் காட்டுகின்றன. கடவுளின் அழைப்பைப் பெற்ற ஒவ்வொருவரும் இந்தப் பணியை செவ்வனே செய்ய அழைக்கப் பட்டிருக்கின்றனர்.